//மிக அவசரம் //

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 4509/ஆ4/ 2022 நாள். 24.05. 2023**

**பொருள் :** பள்ளிக்கல்வி – தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவ/மாணவியர் திறனாய்வுத் தேர்வு டிசம்பர் –2022 (TRUST EXAM) 2022–2023 –ம் கல்வியாண்டிற்கான நிதி ஒதுக்கீடு பெறப்பட்டமை –தமிழ்நாடு ஊரக திறனாய்வுத் தேர்வில் 2019–2020 முதல் 2022–2023 வரை தேர்ச்சி பெற்று தற்போது 9,10,11,12 வகுப்பில் பயின்று வரும் தகுதியுள்ள மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை காசோலை வழங்கிய விவரம் பற்றொப்ப படிவம் கோருதல் –சார்பு

**பார்வை :** 1.தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.067551 /எம்/இ4/2022 நாள் .09.03.2023
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 10.05.2023

----

பார்வையின் காணும் பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகளின் படி தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவ/மாணவியர்களுக்கான திறனாய்வுத் தேர்வில் 2019–2020 முதல் 2022–2023 வரை தேர்ச்சி பெற்று பள்ளிகளில் பயின்று வரும் 9,10,11,12 வகுப்பு மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகைக்கான வங்கி காசோலை 12.05.2023 அன்று ஹோலிகிராஸ் மெட்ரிக் பள்ளியில் நடைபெற்ற தலைமையாசிரியர்களுக்கான கூட்டத்தில் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும் பெற்றுச் செல்லும் காசோலையினை சார்ந்த மாணவ /மாணவியருக்கு வழங்கி விட்டு இத்துடன் இணைக்கபட்டுள்ள பற்றொப்ப பதிவேடு இரசீது மூன்று பிரதிகளில் அசல் கையொப்பம் பெற்று மீள இவ்வலுவலகத்தில் 17 .05.2023 அன்றுக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 பிரிவு எழுத்தரிடம் ஒப்படைக்க சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்பட்டது . எனினும் இதுநாள் வரை பல பள்ளிகள் பற்றொப்ப ரசீது ஒப்படைக்கப்படாமல் உள்ளதால் பள்ளிக் கல்வி ஆணையரகத்துக்கு தொகுப்பறிக்கை அனுப்ப இயலாத சூழல் உருவாகி உள்ளது. இச்செயல் வருந்தத்தக்கதாகும்.

எனவே மேலும் காலம் தாழ்த்தாமல் 26.05.2023 அன்றைக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 பிரிவு எழுத்தரிடம் ஒப்படைக்க சார்ந்த பள்ளி தலைமை கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் .

// ஓம்.க.முனுசாமி //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

இணைப்பு :
மாதிரி படிவம் பற்றொப்ப இரசீது

# வேலூர் மாவட்டம்
# ஊரகத் திறனாய்வுத் தேர்வு
# பற்றொப்ப இரசீது

_______________ம் ஆண்டில் நடைபெற்ற தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வில் தேர்ச்சி பெற்று தற்போது _________ வகுப்பில் பயின்று வரும் செல்வன் /செல்வி ______________________________பதிவு எண் __________________ 2022–2023–ம் கல்வியாண்டில் ரூ.1000/–(ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும் ) காசோலை எண் ________________ முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து பெற்றுக் கொண்டேன் .

மாணவர் கையொப்பம்

| | | |
|---|---|---|
| மாவட்டத்தின் பெயர் | = | வேலூர் |
| கல்வி மாவட்டத்தின் பெயர் | = | வேலூர் |
| தற்போது படிக்கும் பள்ளி முகவரி விவரம் | = | |
| பள்ளி தலைமை ஆசிரியர் கையொப்பம்<br>(பள்ளி முத்திரையுடன் ) | = | |
| முதன்மைக் கல்வி அலுவலர்<br>கையொப்பம்<br>(அலுவலக முத்திரையுடன் )<br>மேலோப்பம | = | |